(4) அறிவிப்புகள்

(அ) பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் விரைவில் வெளியிடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

நமது சட்டப்பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் அச்சிடப்படுவதில் அதிகக் கால தாமதம் ஏற்படுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி குறிப்பிட்டு வந்ததையொட்டி, நடவடிக்கைக் குறிப்புகளை விரைவில் அச்சிட்டு வெளியிடுவதன் அவசியத்தை நான், அச்சுத்துறைப் பொறுப்பை வகிக்கும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, நடவடிக்கைக் குறிப்புகளைத் தாமதமின்றி உடனுக்குடன் வெளியிட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியதன் விளைவாக, கடந்த கூட்டத் தொடரின் கடைசி நாளான 6—4—1972 அன்றைய நடவடிக்கைக் குறிப்புகள் வரை அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைப் பேரவைக்குத் தெரிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், குறிப்பாக அச்சுத்துறை இயக்குநர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் துறைச் செயலாளர், மற்றும் அதிகாரிகளுக்கும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நடவடிக்கைக் குறிப்புகள் தொடர்ந்து விரைவாக வெளியிடப்பட வேண்டிய நடவடிக்கையினை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து எடுத்துக் கொள்ளுவார்கள் என்கின்ற நம்பிக்கையினையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.